**சூரியவெவ பிரதோச சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்பித்திருந்ததுடன் , அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஜுன் 28 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து சூரியவெவ பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) மஹகல்வெவ வாரந்த சந்தை வளவில் உரித்தாக்குதல் தொடர்பாக நில அளவைத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 57,500 இற்கான தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நகர மண்டபத்திற்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 36,500 தொகை பெறுமதியான மைக் ஸ்டான்ட் இனை நிலையான சொத்தாக கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) சபையின் கலஞ்சியத்திற்காக கொல்வனவு செய்திருந்த ரூபா 18,000 தொகையான அலுமினியம் கதவின் பெறுமதியினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 102,773 இற்கான பெறுமதியுடைய நுகர்வு பண்டங்கள் இருப்பின் பெறுமதி கணக்கீடு செயதிருக்கவில்லை.

(உ) அலிஒலுஆர சந்தை வளவில் காணப்படும் கழிவறையை அபிவிருத்தி செய்து திருத்துவதற்காக 2016 ஆண்டின் போது செலுத்தியிருந்த ரூபா 88,732 இற்கு மீண்டு வரும் செலவுகள் மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

(i) 2016 ஆண்டின் போது நிறைவேற்றியிருந்த ஏழு நிர்மாண வேலைகள் தெடர்பாக பெறவேண்டிய கூட்டுத்தொகை ரூபா 969,024 தொகைக்கான 10 சதவீத தடுத்தவைத்தல் பணம் மீளாய்வாண்டு இறுதிவரை அறவீடு செய்திருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 237 நீர் நுகர்வோர்களிடம் ரூபா 244,288 நீர் சிட்டை கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்ககுகள்**

(i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 12,567,971 தொகைக்கான பலவின, நிர்மாண வேலை மற்றும் நீர் வழங்கள் கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) சபையில் தற்போது சேவையில் காணப்படாத 22 ஊழியர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 152,174 இற்கான பெறுமதியுடைய ஊழியர் பிணை மீதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஆதனக் கடனுக்கான வட்டி ரூபா 5,278 தொகை செலுத்த வேண்டியிருந்தது.

**1.3.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 11,690,681 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது பரிசோதனை செய்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்பங்கள் கீழே காணப்படுகின்றன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங் களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | |
| (அ) பிரிவு 134 (1) | புதிய வீதவரி பெறுமதி மதிப்பீடு செய்யும் அலுவல்கள் மீளாய்வாண்டு இறுதிவரை முடிவடைந்திருக்கவில்லை. |
| (ஆ) பிரிவு 152(2) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் தொழில் புரியும் திறந்தொழில் செய்வோரிடம் வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 7,072,724 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,657,170 தொகை ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் | 1,115,000 | 813,030 | 810,180 | 18,100 | 7,820,000 | 963,400 | 924,350 | 39,050 |
| (ii) வாடகை | 19,847,500 | 17,930,430 | 17,813,530 | 911,950 | 12,880,600 | 15,505,298 | 14,603,448 | 901,850 |
| (iii) அனுமதிப்பத் திர கட்டணம் | 1,164,200 | 1,058,871 | 1,031,671 | 27,200 | 1,585,830 | 787,784 | 694,084 | 93,700 |
| (iv) ஏனைய வரு மானங்கள் | 5,720,300 | 7,187,516 | 4,480,293 | 5,626,249 | 5,304,000 | 6,052,387 | 1,843,320 | 4,209,067 |
| மொத்தம் | 27,847,000 | 26,989,847 | 24,135,674 | 6,583,499 | 27,590,430 | 23,308,869 | 18,065,202 | 5,243,667 |

**2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை**

மீளாய்வாண்டிற்கான சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 26.99 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 24.13 மில்லியன் தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு இறுதியில் ரூபா 5.24 மில்லியன் ஆக காணப்பட்ட மொத்த நிலுவை வருமானம் மீளாய்வாண்டு இறுதி அளவில் ரூபா 6.58 மில்லியன் தொகை வரை வளர்ச்சியடைந்து இருந்தது.

**2.2.3 வாடகை**

**கடை வாடகை**

(அ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 40 கடைகளில் இருந்து வாடகை மற்றும் தாமதக் கட்டணமாக கூட்டுத்தொகை ரூபா 984,955 இற்கான தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், அந்த நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சூரியவெவ பஸ் தரிப்பிடத்தில் காணப்படும் 09 கடைகளில் இருந்து மற்றும் சூரியவெவ வாராந்த சந்தை அண்மையிலுள்ள 10 கடைகளில் இருந்து மீளாய்வாண்டிற்கான வாடகை ஏதும் அறவிடப்பட்டிருக்காததுடன், 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடை வாடகை மற்றும் தாமதக் கட்டணம் ஆக கூட்டுத்தொகை ரூபா 924,205 தொகை ஒன்று நிலுவையாக காணப்பட்டது.

(இ) 2010 திசெம்பர் 27 திகதி தபபா/பபாகொ/2010/01 இலக்கம் கொண்ட உள்ளராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரே முறையில் செலுத்தும் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு சூரியவெவ வாராந்த சந்தைக்கு அண்மையில் 09 கடைகளில் இருந்து மற்றும் பஸ் நிலையத்திற்கு அண்மையிலுள்ள கடை ஒன்றில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ஒரே தடவையில் செலுத்தும் பணத்தின் பெறுமதி ரூபா 382,592 தொகையாக இருந்தது.

(ஈ) சூரியவெவ வாராந்த சந்தைக்கு அண்மையிலுள்ள கடை உரிமையாளர்கள் ஏழு பேரிடம் மற்றும் சூரியவெவ பஸ் நிலையத்திற்கு அண்மையில் உள்ள கடை உரிமையாளர் ஒருவரிடம் 2011 ஆண்டிற்கு முன்னர் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ஒரே தடவையில் செலுத்த வேண்டிய பணத்தின் பெறுமதி ரூபா 292,592 தொகையாக இருந்தது. இவ்வாறு நீண்டகாலமாக ஒரே தடவையில் செலுத்தும் பணம் செலுத்தாமல் இருந்த போதிலும் இந்த கடைகளை சபைக்கு திருப்பி உரித்தாக்குவதற்கு அல்லது அந்த பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.4 வியாபார வரி மற்றும் கைத்தொழில் வரி**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 19 கைத்தொழில் மற்றும் வியாபார அலகுகளில் இருந்து ரூபா 18,100 இற்கான வரித் தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.2.5 ஏனைய வருமானங்கள்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 149 இன் பிரகாரம் இலங்கை சுற்றுலா சபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல்கள், உணவகங்கள் மற்றும் தங்குமிடங்கள் இருந்து முன்னைய ஆண்டின் வருமானத்தில் இருந்து 1 சதவீதத்தை மிகைக்காத கட்டணமொன்று அறவிடப்பட முடியுமெனினும் சபையின் அதிகார பிரதேசத்தில்

நடாத்தப்படுகின்ற ஹோட்டல் ஒன்றில் இருந்து 2013 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை ரூபா 1000 வீதம் வருடாந்த வர்த்தக அனுமதிப் பத்திரக் கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களிடம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 5,314,361 தொகையாகும் .

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் , பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதி மற்றும் நலனோம்பு என்பன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செய்பணிகள் நிறைவேற்றுவதில் தாமதம்**

2017 ஆண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் செயற்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த 57 அபிவிருத்தி திட்டங்களில் 29 அபிவிருத்தித் திட்டங்கள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

**(ஆ) பொருளாதார நலன்கள் பெற்றுக் கொள்ளாமை**

சபையின் முகாமைத்துவ தகவல் முறைமையினை அபிவிருத்தி செய்வற்காக ரூபா 720,000 தொகை பெறுமதியான 04 கணிணி உள்ளீட்டு மென்பொருட்கள் முறையை கொல்வனவு செய்வதற்காக 2017 ஏப்ரல் 04 திகதி தனியார் நிருவனம் ஒன்றுடன் உடன்படிக்கை மேற்கொண்டு மீளாய்வாண்டு இறுதி அளவிலும் ரூபா 540,000 இற்கான தொகையொன்று செலுத்தியிருந்த போதிலும் 2018 ஏப்ரல் 05 திகதி அளவிலும் அந் கனிணி உள்ளீட்டு மென்பொருள் முறைமை சபையின் செலாற்றுகைக்கு பங்களிப்பினை பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

**(இ) திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவ வளவைச் சுற்றி பாதுகாப்பு வேலி நிர்மாணித்திருக்காததுடன் சபையினால் முறையான குப்பை முகாமைத்துவம் ஒன்று மேற்கொண்டு சேதனப் பசளை உற்பத்தி செய்யும் அலுவல்கள் 2018 ஏப்ரல் 05 திகதி அளவிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரல் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகலாவிய சுட்டிகளின் ஊடாக அதிகார பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்கை தரம் மற்றும் சுகாதாரத்தின் மேம்படுத்துவதற்கான நீண்ட கால திட்டங்களை சபையினால் தயாரித்திருக்கவில்லை.

**3.2 மனித வன முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியனியினை மிகைத்து ஊழியர் ஒருவர் சேர்கப்பட்டிருந்ததுடன் மேலும் 4 பதவிகளில் 06 ஊழியர்கள் வெற்றிடம் காணப்பட்டது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட சுகாதார தொழிலாளர்கள் மற்றும் வெளி வேலை தொழிலாளர்கள் ஐந்து பேர் உட்பட ஒன்பது பேர்களுக்கு அவர்களுக்கு உரிய கடமைகள் சாட்டப்படாமல் வேறு கடமைகள் சாட்டப்பட்டிருந்தது.

(இ) சேவையில் இருந்து ஒய்வு பெற்றிருந்த உத்தியோகத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய கடன்தொகை ரூபா 65,175 இனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டுத் திறமையின்மை**

**வீதி விளக்குகள் பராமரிப்பு**

2010 ஆகஸ்ட் 17 திகதிய இலக்கம் பீஈ/01/01 கொண்ட மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிறுவியுள்ள வீதி விளக்குகள் தொடர்பாக சபைக்கு அறிவித்து முறைப்படுத்தாமையால் சபை நிதியத்தில் இருந்து பராமரிக்கப்படும் 1583 வீதி விளக்குகளில் 531 வீதி விளக்குகளினது மாத்திரம் கட்டம் மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாமை**

சாட்டுதல் கட்டளை ஒன்றின் மூலம் சூரியவெவ பிரதேச சபைக்கு சாடப்பட்டிருந்த சமாஜசேவாபுர II வீரியகம மற்றும் விஹாரகல ஆகிய இடங்களிலுள்ள மயானங்களை சுற்றி வேலிகள் நிர்மாணித்து வளவுகளை ஒதுக்கியிருக்கவில்லை.

**3.4.2 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்**

சபையினால் பயன்படுத்தப்படும் ரூபா 38,225,000 கிரயத்தை உடைய 11 கட்டிடங்களின், ரூபா 18,500,000 தொகை கிரயத்தை உடைய 07 காணிகள் மற்றும் 31 மயானங்களின் சட்டரீதியான உரிமை சபைக்கு உரித்தாக்குவதற்கு அலுவல்கள் மீளாய்வாண்டு இறுதிவரை முடிவடைந்திருக்கவில்லை.

**3.4.3 வாகனப் பயன்பாடு**

2016 ஆகஸ்ட் மாதம் முதல் சிதைவடைந்த நிலையில் காணப்பட்ட கப் வண்டி ஓட்டுவதற்கு பொருத்தமற்ற நிலையில் காணப்பட்டதால் அகற்றுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.5 பெறுகை

#### 3.5.1 பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை

#### 3.5.2 ஒப்பந்த நிருவாகம்

**சூரியவெவ பொது சந்தையில் மீன் சந்தை நிர்மாணித்தல்**

புரநெகும செயற்திட்டத்தின் கீழ் சூரியவெவ பொது சந்தையின் மீன் சந்தை நிர்மாணிக்கும் அலுவல்கள் 2016 பெப்ரவரி மாதம் அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் மீன் சந்தையை திறந்து பொது மக்களுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் இடையே பின்வருமாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டன

(அ) ரூபா 10,000 இனை மிகைத்த 56 செலவு விடயங்கள் பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 10,370,000 இற்கான ஏற்பாடுகளில் ஒரு தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூன்று வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 25,315,802 தொகையாக காணப்பட்டதுடன் அப்பெறுமதி 27 சதவீதம் முதல் 56 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது.

(இ) ஆறு செலவு விடயங்களில் சேமிப்பின் கூட்டுத்தொகை ரூபா 23,955,798 தொகையாக காணப்பட்டதுடன் அப்பெறுமதி 30 சதவீதம் 71 சதவீதம் வரை வீச்சில் இருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுபாட்டு பரப்புகள் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமை | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) நிதிக் கூற்றுகள் தயாரிக்கும் போது கணக்கு மீதிகள் கைவிடப்பட்ட சந்தர்பங்கள் காணப்படல்.<br>(ii) தொங்கல் கணக்குகள் பிழையற்ற முறையில் தீர்த்திருக்கவில்லை. |
| (ஆ) வருமான நிருவாகம் | (i) புதிய வீதவரி பெறுமதி மதிப்பீடு செய்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br>(ii) நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | | (iii) | புதிதாக வருமானம் உருவாக்கும் வழிகளை இனங்கானல் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. |
| (இ) | பதவியணி முகாமைத்துவம் | (i) | பாதை தொழிலாளிகள் மற்றும் சுகாதார தொழிலாளர்கள் அவர்களுக்கு உரித்தில்லாத கடமைகளி ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். |
| | | (ii) | வெற்றிடங்கள் நிரப்புதல் மற்றும மிகையான பதவிகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) | பாதீட்டு கட்டுபாடு | (i) | வருமான மற்றும் செலவு விடயங்களுக்கு மிகை மதிப் செய்யப்பட்டிருந்தது. |
| | | (ii) | சில செலவு விடயங்களில் மதிப்பிடப்பட்ட மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப் பட்டிருத்தல். |
| | | (iii) | பாதீட்டு இலக்குகள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |